DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | | --- |
| Miscellaneous | | --- |
| Preliminary Register | : | **CC 226/2024** |
| Deposition of Witness for | : | PW 3 |
| Name | : | மகேஸ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 30.10.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 30th **October 2025.**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் நகராட்சியில் குப்பை அள்ளும் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். எதிரி கோட்டைத்துரையை தெரியும். 2016 ம் வருடம் ஒரு நாள் மதியம் 1 மணிக்கு மேல் சங்கரன்கோவில் நகராட்சி புதுக்கட்டிடத்திற்கு மேற்குபுறத்தில் நான் வேலை செய்துகொண்டிருந்தேன். அங்கு சாய்பாபா 6 கிமீ திருநெல்வேலி ரோடு என்று போட்டிருந்த போர்டுக்கு அருகே கோட்டைத்துரை மதுபோதையில் பைக்கை ஓட்டிவந்தார். சைக்கிளில் வந்த காளியப்பன் மீது எதிரி ஓட்டிவந்த பைக் மோதி காளியப்பன் சம்பவ இடத்தில் இறந்துபோனார். சம்பவம் நடந்த அன்று எத்தனை நபர்கள் வேலை செய்தோம் என்றால் சுமார் 16 நபர்கள் வேலை செய்தோம். போலீசார் என்னை இது சம்பந்தமாக விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்குவிசாரணை இல்லை என தெரிவித்தார்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 226/2024** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : ஆறுமுகம் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 30.10.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 30th **October 2025.**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

முதல்விசாரணை:

நான் தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் நகராட்சியில் கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் காலை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனை பக்கம் வேலை செய்துகொண்டிருந்தபோது அங்கு வந்த போலீசார் வெள்ளைப்பேப்பரில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

போலீசார் விசாரணையில் கடந்த 16.03.2016 ம் தேதி மதியம் 3.30 மணியளவில் நானும், எங்கள் ஊரை சேர்ந்த முனியப்பன் என்பவரும் புதிய நகராட்சி அலுவலகம் முன்பு நின்றுகொண்டிருந்போது அங்கு வந்த போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர்மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவும் அதில் நானும், ஆறுமுகம் என்பவரும் கையொப்பம் செய்ததாகவும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்குவிசாரணை இல்லை என தெரிவித்தார்**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | | --- |
| Miscellaneous | | --- |
| Preliminary Register | : | **CC 226/2024** |
| Deposition of Witness for | : | PW 5 |
| Name | : | முனியப்பன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 30.10.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 30th **October 2025.**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் நகராட்சியில் துாய்மைப்பணியாளராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் காலை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனை பக்கம் வேலை செய்துகொண்டிருந்தபோது அங்கு வந்த போலீசார் வெள்ளைப்பேப்பரில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

போலீசார் விசாரணையில் கடந்த 16.03.2016 ம் தேதி மதியம் 3.30 மணியளவில் நானும், எங்கள் ஊரை சேர்ந்த ஆறுமுகம் என்பவரும் புதிய நகராட்சி அலுவலகம் முன்பு நின்றுகொண்டிருந்போது அங்கு வந்த போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர்மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவும் அதில் நானும், ஆறுமுகம் என்பவரும் கையொப்பம் செய்ததாகவும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்குவிசாரணை இல்லை என தெரிவித்தார்

எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்குவிசாரஊண இல்ஊல என தெரிவித்தார்